# முதியோர் ஓய்வூதிய விநியோகத்தில் முறைகேடு: 4 அஞ்சலகங்களில் சிபிஐ சோதனை

## 12 ஊழியர்கள் சிக்கினர்

**சென்னை, செப் 20:** முதியோர் ஓய்வூதிய விநியோகத்தில் முறைகேடுகள் நடப்பதான புகார்களை அடுத்து சென்னையில் 4 அஞ்சலகங்களில் சிபிஐ அதிகாரிகள் திங்கள்கிழமை அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். அப்போது முறைகேட்டில் ஈடுபட்ட அஞ்சல் துறையின் 12 ஊழியர்கள் சிக்கினர்.

இது குறித்த விவரம்: மூத்த குடிமக்களுக்கான சமூக பாதுகாப்பு திட்டத்தின் ஒருபகுதியாக மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் ஓய்வூதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வருவாய்த்துறை மூலம் அந்தந்த பகுதி அஞ்சலகங்கள் மூலம் ஓய்வூதியம் விநியோகிக்கப்படுகிறது.

தமிழகத்தில், மூத்த குடிமக்களுக்கு தலா ₹ 400 ஓய்வூதியமாக அனுப்பப்படுகிறது. இதற்கான தபால் செலவாக தலா ₹ 20-ம் சேர்த்து அஞ்சலகங்களுக்கு அனுப்பப்படுகிறது. சென்னையில் மட்டும் சுமார் 2.36 லட்சம் பேர் இந்த ஓய்வூதியம் பெறுகின்றனர்.
இந்தப் பணத்தை விநியோகிப்பதில், அஞ்சல் துறை ஊழியர்கள் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக தொடர்ந்து புகார்கள் எழுந்தன.

ஓய்வூதியம் பெறுவோரின் இறப்பு குறித்த தகவலை மறைத்து தபால்காரர்களே அத்தொகையைப் பெற்றுக் கொள்வது, இந்த முறைகேடுகளைத் தட்டிக்கேட்பவர்கள் பெயரில் வரும் ஓய்வூதியத்தை அவர் வாங்க மறுத்ததாகக் குறிப்பிட்டு திருப்பி அனுப்புவது என பல்வேறு முறைகேடுகளில் தபால்காரர்கள் ஈடுபடுவதாக தெரியவந்தது.

குறிப்பாக தியாகராய நகர், மேற்கு மாம்பலம் உள்ளிட்ட பகுதிகளில் இறந்தவர் பெயர்களில் ஓய்வூதியம் விநியோகிக்கப்பட்டது தொடர்பான பெயர் பட்டியல் உள்ளிட்ட ஆவணங்கள் சிபிஐ அதிகாரிகளிடம் சிக்கியது. பல்வேறு தரப்பில் இருந்து வந்த இத்தகைய புகார்களின் அடிப்படையில் சிபிஐ அதிகாரிகள் வழக்குப் பதிவு செய்தனர்.

**திடீர் சோதனை:** இதன்படி கே.கே. நகர், அசோக் நகர், மேற்கு மாம்பலம், அண்ணா நகர் உள்ளிட்ட அஞ்சலகங்களில் திங்கள்கிழமை காலையில் சிபிஐ அதிகாரிகள் திடீர் சோதனையில்ஈடுபட்டனர். அப்போது, முதியோர் ஓய்வூதிய விநியோகப் பணியில் ஈடுபட்ட தபால் ஊழியர்களை சுற்றி வளைத்த அதிகாரிகள் அவர்களிடம் இருந்த ஆவணங்கள், உரிய கணக்கில்லாமல் இருந்த ரொக்கம் உள்ளிட்டவை குறித்து விசாரணை மேற்கொண்டனர். முதியோர் ஓய்வூதிய விநியோகம் தொடர்பாக அந்தந்த அஞ்சலகங்களில் பராமரிக்கப்பட்டுவரும் கணக்கு ஆவணங்களையும் சிபிஐ அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

காலை 10 மணிக்கு தொடங்கிய இந்த சோதனை மாலை 6 மணி வரை நீடித்தது. இதில் 12 ஊழியர்கள் சிக்கினர். இவர்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து சிபிஐ அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.